DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.26 /2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.3 P.W.2 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரவணக்குமார் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : நாச்சிமுத்து | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 02.03.2026

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது குடிமங்கலம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் அமராவதி நகர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 20.06.2020 ம் தேதி அமராவதி நகர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் குற்றத்தடுப்பு மற்றும் மணல் திருட்டு தடுப்பு நடவடிக்கை சம்பந்தமாக ரோந்து அலுவலில் இருந்த போது நானும் காவலர்கள் ராமகிருஷ்ணன் சுரேஷ் ஆகியோருடன் புறப்பட்டு அமராவதி ஆற்று பகுதிகளின் நாவல் ஓடை, பூளவாடி புதூர் ஆகிய இடங்களில் ரோந்து பணியில் சென்று 17.15 மணிக்கு கல்லாபுரம் ஆற்று பாலம் அருகே கண்காணித்து வந்த போது பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மாரிமுத்து த/பெ.முருகேசன் என்பவர் ஆற்றில் இருந்து இரண்டு சாக்கு மூட்டைகளில் மணலை திருடி டிவிஎஸ் 50 TN 41 E 1254 வாகனத்தில் வைத்து புறப்பட்டுக்

கொண்டிருந்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் அரசு அனுமதி இன்றி அமராவதி ஆற்றில் இருந்து சாக்குப்பைகள் மூலம் ஆற்று மணலை திருடிய குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை 17:30 மணிக்கு கைது செய்து டிவிஎஸ் 50 வாகனத்தையும் இரண்டு மணல் மூட்டைகளையும் பொதுஜன சாட்சிகள் யாரும் முன் வராததால் உடன் சென்ற காவலர்கள் ராமகிருஷ்ணன் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் 17 .45 மணிக்கு கைப்பற்றத்தில் மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்னர் எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் சத்துக்களையும் 12 15 மணிக்கு நிலையம் ஆஜர் படுத்தி நிலைய குற்ற எண் 341/2020 ச/பி 379 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ .3 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை திரேக பரிசோதனைக்கு பின் பாரா காவல் வசம் ஒப்புவித்து எதிரியை தக்க இரு நபர் ஜாமினில் விடுவித்தேன்.
3. பின்னர் காவலர்கள் ராமகிருஷ்ணன் சுரேஷ் ஆகிய வரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலமாக தனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அசா.ஆ.4 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைப்பற்றப்பட்ட மணலை தாசில்தார் அலுவலகத்திற்கு முறைப்படி ஒப்புவித்தேன். பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் .

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மணல் மூட்டையின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் இரு மூட்டையின் மதிப்பு ரூ. 500/- இருக்கும். TVS 50 வாகனத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் ரூ . 1000-1500 இருக்கும். மணல் மூட்டையின் அளவு என்ன என்றால் ஒரு மூட்டையின் அளவு 15 கிலோ இருக்கும். மணல் மூட்டையின் அளவு பற்றி வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.